ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2114/50 - 2019 මාර්තු මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.03.14

2114/50 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்*

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின், ஹசலக நீர் வழங்கல் திட்டத்தின் வராகொல்ல நிலக்கீழ் நீர்க் களஞ்சிய தாங்கியின் பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையாச் சொத்துரிமையை பெற்றுக் கொள்வதற்கான கட்டளையை இத்தால் அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சு,
இல. 35, 'லக்திய மெதுர', புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த,
பத்தரமுல்லை,
2019, மாச்சு 05.
5/2/1/1448.



இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் மினிபே பிரதேச செயலாளர் பிரிவில், இல. 931, வேரகம கிராம அலுவலர் பிரிவில் திக்கொம்மன, எல (கால்வாய்) 46 கிராமத்தில் அமைந்துள்ள "எல 46, காணித் துண்டு இல. 05" எனும் காணியில் கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த சுமார் 11 பேர்ச்சஸ் அளவிலான காணித்துண்டுகள் இரண்டு:*

*காணித் துண்டு இலக்கம் : ஏ;*
*காணியின் பெயர் : எல 46, காணித் துண்டு இல. 05;*

*காணியின் எல்லைகள் :*

வடக்கு : எம். ஜீ. டிங்கிரி பண்டா உரிமை கோரும் காணி மற்றும் வீடு ;
கிழக்கு : பொதுப் பாதை மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய் ;
தெற்கு : கம்பி வேலி மற்றும் எம். ஜீ. லீலாவதி உரிமை கோரும் காணி ;
மேற்கு : பாதுகாப்பான யானை வேலி.

*காணித் துண்டு இலக்கம் : பி;*
*காணியின் பெயர் : எல 46, காணித் துண்டு இல. 05;*

*காணியின் எல்லைகள் :*

வடக்கு : எம். ஜீ. டிங்கிரி பண்டா உரிமை கோரும் காணி ;
கிழக்கு : எம். ஜீ. டிங்கிரி பண்டா உரிமை கோரும் காணி மற்றும் வீடு ;
தெற்கு : எம். ஜீ. டிங்கிரி பண்டா உரிமை கோரும் காணி மற்றும் எம். ஜீ. லீலாவதி உரிமை கோரும் காணி;
மேற்கு : பாதுகாப்பான யானை வேலி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :*

1. வண. உருலேவத்தே தம்மரக்கித தேரர்,
   விஹாராதிபதி,
   மஹியங்கன ரஜ மகா விகாரை,
   மஹியங்கன.

2. பொது நம்பிக்கைப் பொறுப்பாளர்,
   பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம்,
   புள்ளர்ஸ் வீதி,
   கொழும்பு 07.

3. எம். ஜீ. டிங்கிரி பண்டா,
   இல. 5, எல 46,
   வேரகம, வேரகந்தொட்ட,
   மற்றும் இன்னும் சிலர்.

03 –1425

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், (2 ஆவது அத்தியாயமான) விளக்கப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் 18 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, கலகெதர மாவத்தகம*

நீர் வழங்கல் செயற்திட்டத்தின் நிலையப் பொறுப்பதிகாரி அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கான தேவை ஏற்பட்டுள்ளது. இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதற்குரிய இலக்கம் 2069/ 21 மற்றும் 2018, மே 02 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை இக்கட்டளையினூடாக இரத்துச் செய்வதற்கு அனுமதியளிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, மாச்சு 05.
5/2/2/1370.

**அட்டவணை**

குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகம பிரதேச செயலாளர் பிரிவில், இல. 677, மாவத்தகம கிராம அலுவலர் பிரிவில் மாவத்தகம கிராமத்தில் அமைந்துள்ள 'டென்வர்வத்த' என்றழைக்கப்படும் காணியின் முழு விஸ்தீரணத்திலிருந்து 02 றூட் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி :

வடக்கு : பிரதேச செயலாளரிடமுள்ள அரசாங்கக் காணி ;
கிழக்கு : பிரதேச செயலாளரிடமுள்ள அரசாங்கக் காணி;
தெற்கு : இல. ஏ 10, கண்டி-குருநாகல் பிரதான வீதி ;
மேற்கு : வலயக் கல்வி அலுவலகத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள காணி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :
பிரதேச செயலாளர், மாவத்தகம.

03 -1426